# சத்தியமங்கலம் நகராட்சி

2022-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30.09.2022-ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தின் நடவடிக்கைகள்.

பொருள் : 1

சத்தியமங்கலம் நகராட்சி ஆணையாளர் திரு.மெ.சரவணகுமார் அவர்களின் செப்டம்பர் 2022-ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம். (கட்டு எண்.528/2022/சி1)

தீர்மானம் எண் : 168 பதிவு செய்யப்பட்டது நாள் 30.09.2022

பொருள் : 2

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட புதிய பேருந்து நிலைய கடைகள், பழைய பேருந்து நிலைய கடை இனம் வரும் 31.06.2022 மற்றும் 30.09.2022-ஆம் தேதியுடன் உரிமம் காலம் முடிவடைவதால் அரசாணை எண்.(நிலை) 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.4) துறை நாள்.03.07.2007 ன்படி மேலும் நீடித்து கொள்வது குறித்து விருப்ப படிவம் பெறப்பட்டது. அதன்படி உரிமக்கட்டணம் மற்றும் 12 மாத வாடகை வித்தியாச முன்வைப்புத் தொகைகள் பெறப்பட்டதை தொடர்ந்து ஏல பொது நிபந்தனைகளுக்குட்பட்டு கீழ்கண்ட இனங்களுக்கு மேலும் ஒப்படைக்கும் தேதி முதல் மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் வழங்குவது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | இனம் | கடை எண் | விதிப்பு எண் | கடை ஏல உரிமதாரர் பெயர் | பழைய மாத வாடகை | 15% உயர்வு செய்த பின் மாத வாடகை | நீடிப்பு செய்து வழங்கும் வாடகை காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | புதிய பேருந்து நிலைய கடை | 55 | 061/3142 | கோவிந்தராஜன் | 14449/- | 16617/- | 01.10.2022 முதல் 30.09.2025 (உரிமம் புதுபிப்பு முதல் முறை) |
| 2. | புதிய பேருந்து நிலைய கடை | 57 | 061/3144 | ரூபா க/பெ ல.பழனிச்சாமி (லேட்) | 11397/- | 13107/- | 01.10.2022 முதல் 30.09.2025 (உரிமம் புதுபிப்பு முதல் முறை) |
| 3. | புதிய பேருந்து நிலைய கடை | 58 | 061/3145 | ச.மன்சூர்அலி | 11255/- | 12943/- | 01.10.2022 முதல் 30.09.2025 (உரிமம் புதுபிப்பு முதல் முறை) |
| 4. | புதிய பேருந்து நிலைய கடை | 59 | 061/3146 | கிரிகோரி | 9277/- | 10667/- | 01.10.2022 முதல் 30.09.2025 (உரிமம் புதுபிப்பு முதல் முறை) |
| 5. | புதிய பேருந்து நிலைய கடை | 60 | 061/3147 | சர்புதீன் | 12015/- | 13817/- | 01.10.2022 முதல் 30.09.2025 (உரிமம் புதுபிப்பு முதல் முறை) |
| 6. | புதிய பேருந்து நிலைய கடை | 61 | 061/3148 | ஏ.நவுபால் | 13232/- | 15217/- | 01.10.2022 முதல் 30.09.2025 (உரிமம் புதுபிப்பு முதல் முறை) |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 7. | புதிய பேருந்து நிலைய கடை | 63 | 061/3150 | எஸ்.பி.சீனிவாசன் | 11863/- | 13643/- | 01.10.2022 முதல் 30.09.2025 (உரிமம் புதுபிப்பு முதல் முறை) |
| 8. | பழைய பேருந்து நிலைய கடை | 3 | 061/BD01/00046 | சையத் ஆகில் | 12000/- | 13800/- | 01.07.2022 முதல் 31.06.2025 (உரிமம் புதுபிப்பு முதல் முறை) |

<u>அலுவலகக்குறிப்பு :</u>

1. மேற்காணும் புதிய பேருந்து நிலைய கடைகள், பழைய பேருந்து நிலையம் கடை இனம் வரும் 31.06.2022 மற்றும் 30.09.2022-ஆம் தேதியுடன் உரிமம் காலம் முடிவடைவதையொட்டி, மேலும் அரசாணை எண்.92-ன் படி உரிய உரிமக்கட்டணம் மற்றும் 12 மாத வாடகை வித்தியாச முன் வைப்புத் தொகைகள் பெறப்பட்டது. எனவே மேற்கண்ட கடைகளுக்கு அரசாணை எண். 92-ன் படி மற்றும் பொது ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு மேலும் மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் நீடிப்பு செய்து மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1200/2020/அ3

**தீர்மானம் எண் : 169 அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது நாள் 30.09.2022**

பொருள் : 3

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய கடை எண்.64-ஐ திரு.பி.வேலுச்சாமி என்பவருக்கு 01.10.2019 முதல் 30.09.2022 வரை உண்டான காலத்திற்க்கு மாத வாடகை ரூ.11710/-க்கு உரிம ஆணை வழங்கப்பட்டது. தற்போது கடை உரிமதாரர் உடல் நிலை சரியில்லாத காரணத்தால், மேலும் கடையை நீடித்துக் கொள்ள சம்மத கடிதம் நாளது வரை வழங்கப்படவில்லை. மேலும் கடையை தொடர்ந்து கடையை நடத்த முடிய வில்லை என 26.09.2022 ஆம் தேதியில் விண்ணப்பம் செய்துள்ளார். எனவே இவரின் மேற்கண்ட உரிம இனத்தை ரத்து செய்து புதிய இனமாக அரசானை எண்.92 மற்றும் ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :-

மேற்க்கண்ட புதிய பேருந்து நிலைய கடை எண். 64-உரிமம் 30.09.2022-ம் தேதியுடன் முடிவடைவதால் மேலும் நீடித்துக் கொள்ள சம்மதகடிதம் வழங்கப்படவில்லை, மேலும் தற்போது உடல் நிலை சரியில்லாத காரணத்தால் கடையை தொடர்ந்து கடையை நடத்த முடிய வில்லை என மனு வழங்கியுள்ளார். இதன் மீது வருவாய் ஆய்வாளர் அவர்களின் 26.09.2022 ஆம் தேதி குறிப்பு வழங்கபட்டதின் பேரில் புதிய பேருந்து நிலைய கடை எண்.64-ன் உரிமம் காலம் முடிவடையாத நிலையில் மேற்க்கண்ட கடையினை ஒப்படைப்பு செய்வதால் உரிம இனத்தை புதிய இனமாக மேற்கண்ட கடையின் உரிமம் இரத்து செய்து ஒப்படைக்கும் தேதி முதல் மூன்றாண்டு காலத்திற்கு அரசாணை எண்-92 மற்றும் பொது ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

அவசர அவசியம் கருதி ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ந.க.எண்.1200/2022/அ3

**தீர்மானம் எண் : 170 அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது நாள் 30.09.2022**

பொருள் : 4

சத்தியமங்கலம் நகராட்சியின் 2020-21 ம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் கல்வி நிதி கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கைகள் மற்றும் குறிப்புக்களை உதவி இயக்குனர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, ஈரோடு அவர்களது கடிதம் ந.க.எண்.626/த1/2021 நாள்.18.02.2022-ன் மூலமாக இந்நகராட்சிக்கு

பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட நிதிகளின் மீதான தணிக்கை அறிக்கைகளை நகர் மன்றத்தின் மேலான பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 5235/2012/பி1)

**தீர்மானம் எண் : 171** பதிவு செய்யப்பட்டது **நாள் 30.09.2022**

**பொருள் : 5**

சத்தியமங்கலம் நகராட்சியின் 2020-21 ம் ஆண்டிற்கான தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட தணிக்கை ஆண்டிற்கான தணிக்கை ரூ.82,836/- ( ரூபாய் எண்பத்தி இரண்டாயிரத்து எந்நூற்று முப்பத்தாறு மட்டும்) யை அரசு தலைப்பில் செலுத்துமாறு தணிக்கை துறையினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட தொகையை செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 5235/2012/பி1)

**தீர்மானம் எண் : 172** அனுமதிக்கப்பட்டது **நாள் 30.09.2022**

**பொருள் : 6**

நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.31117/2021/CFC -1 நாள்.05.09.2022 இன்படி 2021-2022 ஆம் ஆண்டு 15 வது நிதி குழு மான்யம் Un-Tied Grant திட்டத்தின் கீழ் சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட மொண்டிகரடு புளியங்கோம்பை மற்றும் ஆண்டவர் நகர் ஆகிய பகுதியில் குடிநீர் வசதிகள் மேற்கொள்ள ரூ.5.47 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 15 வது நிதி குழு மான்ய பங்கு ரூ.5.10 இலட்சம் மற்றும் நகராட்சி பங்கு ரூ.0.37 ஆக மொத்தம் ரூ.5.47 இலட்சம் ஆகும். எனவே, மேற்கண்ட பணி 2021-2022 ஆம் ஆண்டு 15-வது நிதிக்குழு மான்யம் Un-Tied Grant திட்டத்தின் கீழ் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -**
1)மன்றம் அனுமதிக்கலாம்
2)ரூ.0.37 இலட்சம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்,
3)இப்பணியின் முக்கியத்துவம் கருதியும் திட்டப்பணி விரைந்து முடிக்கப்பட வேண்டியுள்ளதாலும், ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(கட்டு எண்.1770/2021/இ1)

**தீர்மானம் எண் : 173** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது **நாள் 30.09.2022**

**பொருள் : 7**

நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களின் செயல்முறை ஆணையில் மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அவர்களின் தமிழ்நாடு சட்டமன்ற 2022-23 ஆம் ஆண்டிற்கான 07.04.2022 நாளிட்ட அறிவிப்பு எண்.16 நகரத்தில் காற்றோட்டமான பகுதியில் Lung Space அதிகரிக்கும் நடவடிக்கையாக 124 நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் தேக்கத்திடக்கழிவுகளை Bio -Mining முறையில் அகற்றி மீட்கப்பட்டுள்ள 369 ஏக்கர் நிலத்தில் ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் நகர்புற காடுகள் உருவாக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்கள்.மேலும், இந்நகராட்சிக்கு உட்பட்ட நகராட்சி குப்பை கிடங்கில் பழைய கழிவுகளை (Legacy wastes) Bio -Mining முறையில் அகற்றப்பட்டு 3.55 ஏக்கர் நிலம் மீட்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட இடத்தில் ரூ.4.60 இலட்சத்திற்கு நகர்புற காடுகள் (Urban Forestation) அமைக்க 15 வது நிதிக்குழு மான்யம் Tied Grant -2022-23 திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வழங்கி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட திட்டத்தில் பணி மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -**
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இப்பணியின் முக்கியத்துவம் கருதியும் திட்டப்பணி விரைந்து முடிக்கப்பட வேண்டியுள்ளதாலும், ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(கட்டு எண்.1908/2022/இ1)

**தீர்மானம் எண் : 174** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது **நாள் 30.09.2022**

பொருள் : 8

இந்நகர் மன்ற தீர்மானம் எண். 158 நாள்.30.08.2022 இன்படி இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் குடிநீர் டேங்கர் லாரி வாகனம் எண்.TN 36 AZ 8821 வாகனத்திற்கு செப்டம்பர் மாதம் தகுதி சான்று முடிவதால் மீண்டும் தகுதி சான்று பெற வேண்டி வாகனம் பழுது சரி செய்ய 09.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இப்பணி இரண்டு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளன.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | M/s.Baghyalakshmi Motor Works Erode | ரூ.2.50 இலட்சம் | ரூ.249000/- |
| 2 | M/s.Murugan Autos Vairapalayam Erode | | ரூ.250500/- |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s.Baghyalakshmi Motor Works, Erode நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s.Baghyalakshmi Motor Works, Erode நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளலாம்.
3) வண்டியின் தகுதி சான்று காலம் முடிவதால் மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(கட்டு எண்.1688/2022/இ1)

**தீர்மானம் எண் : 175 அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது நாள் 30.09.2022**

பொருள் : 9

இந்நகராட்சி 2022-23 ஆம் ஆண்டு கல்வி நிதி திட்டத்தின் கீழ் இந்நகர் மன்ற தீர்மானம் எண்.152/30.8.2022,156/30.08.2022,154/30.08.2022 இன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.16.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

1)வேலையின் பெயர்:Construction of Store Room at Sathy-1 Middle School in Sathyamangalam Municipality
Estimate Amount:Rs.5,00,000/-

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | Thiru.Arumugam Contractor Sathyamangalam | ரூ.4,18,585/- | மதிப்பீடு தொகையினை விட 0.12%குறைவு |
| 2 | M/s.Vino Constructions Contractor Bhavani Sagar | ரூ.4,21,926/- | மதிப்பீடு தொகையினை விட 0.67% அதிகம் |

2)வேலையின் பெயர்:Maintaince and Repairs work to Municipal High School Rangasamuthiram in Sathyamangalam Municipality
Estimate Amount: 5,00,000/-

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s.Vino Constructions Contractor Bhavani Sagar | ரூ.4,18,442/- | மதிப்பீடு தொகையினை விட 0.14%குறைவு |
| 2 | Thiru.S.R.Moorthy Contractor Sathyamangalam | ரூ.4,20,682/- | மதிப்பீடு தொகையினை விட 0.39 % அதிகம் |

3)வேலையின் பெயர்:Maintaince and Repairs work to Municipal Elementary School Rangasamuthiram in Sathyamangalam Municipality
Estimate Amount:4,00,000/-

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s.Vino Constructions Contractor Bhavani Sagar | ரூ.3,34,981/- | மதிப்பீடு தொகையினை விட 0.13%குறைவு |
| 2 | Thiru.S.R.Moorthy Contractor Sathyamangalam | ரூ.3,37,385/- | மதிப்பீடு தொகையினை விட 0.59 % அதிகம் |

வ.எண்.1 மட்டும் மற்றும் வ.எண்.2 மற்றும் 3 பணிகளுக்கு குறைவான ஒப்புந்தப்புள்ளி வழங்கிய Thiru.Arumugam Contractor Sathyamangalam, M/s.Vino Constructions Contractor, Bhavani Sagar அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -**
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s.Vino Constructions, Contractor, Bhavani Sagar மற்றும் Thiru.Arumugam,Contractor, Sathyamangalam ஒப்பந்தப்புள்ளி ஏற்று கொள்ளலாம்.

(கட்டு எண்.1465/2022,548/2022/இ1)

**தீர்மானம் எண் : 176 அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது நாள் 30.09.2022**

பொருள் : 10

இந்நகராட்சியின் வருவாய் நிதி திட்டம் -2022-2023 இன்கீழ் கீழ்கண்ட பணிகளுக்கு இந்நகர் மன்ற தீர்மானம் எண். 142/29.7.2022, 144/29.7.2022, 141/29.7.2022 இன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு 14.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நகர் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

1) வேலையின் பெயர்: வார்டு எண்.15 மாரியம்மன் கோவில் வீதி (சுண்ணாம்புகாரர் சந்து ) பகுதியில் சிமெண்ட் பேட்ச் மற்றும் மழை நீர் வடிகால் பழுது பார்த்தல்
மதிப்பீடு தொகை:ரூ.0.70 இலட்சம்

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s.Vino Constructions Contractor, Bhavani Sagar. | ரூ.57,936/- | மதிப்பீடு தொகையினை விட 0.02 % குறைவு |
| 2 | Thiru.S.R.Moorthy, Contractor, Sathyamangalam. | ரூ.58,075/- | மதிப்பீடு தொகையினை விட 0.22 % அதிகம் |

2)வேலையின் பெயர்: பழைய தபால் ஆபீஸ் ரோடு சத்தியா மருத்துவமனை முதல் பண்ணாரி சந்திப்பு வரை தார் பேட்ச் பணி மேற்கொள்ளுதல்
மதிப்பீடு தொகை:ரூ.3.00 இலட்சம்

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s.Vino Constructions Contractor Bhavani Sagar | ரூ.2,50,614/- | மதிப்பீடு தொகையினை விட 0.04 % குறைவு |
| 2 | Thiru.S.R.Moorthy Contractor Sathyamangalam | ரூ.2,50,852/- | மதிப்பீடு தொகையினை விட 0.09 % அதிகம் |

3)வேலையின் பெயர்: திப்புசுல்தான் ரோடு சத்தியா தியேட்டர் முதல் கோம்புபள்ளம் சந்திப்பு வரை தார் பேட்ச் பணி மேற்கொள்ளுதல்
மதிப்பீடு தொகை: ரூ.5.00 இலட்சம்

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s.Vino Constructions Contractor Bhavani Sagar | ரூ.4,19,017/- | மதிப்பீடு தொகையினை விட 0.04 % குறைவு |
| 2 | Thiru.S.R.Moorthy Contractor Sathyamangalam | ரூ.4,19,415/- | மதிப்பீடு தொகையினை விட 0.09 % அதிகம் |

வ.எண்.1 முதல் 3 வரை உள்ள பணிகளுக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s.Vino Constructions, Contractor, Bhavani Sagar நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு : -

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s.Vino Constructions, Contractor, Bhavani Sagar ஒப்பந்தப்புள்ளி ஏற்று கொள்ளலாம்.

(கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 177 அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது நாள் 30.09.2022**

பொருள் : 11

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையில் Bio -Mining முறையில் அகற்றப்பட்டு 3.55 ஏக்கர் நிலம் மீட்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட இடத்தில் ரூ.4.60 இலட்சத்திற்கு நகர்புற காடுகள் (Urban Forestation) அமைக்க 15 வது நிதிக்குழு மான்யம் Tied Grant -2022-23 திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. நகராட்சி பொறியாளர் அவர்களால் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு 14.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் அடிப்படையில் ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

வேலையின் பெயர்: Plantation of Trees in Compost Yard at Sathyamangalam Municipality

Estimate Amount :Rs.4.60 lakhs

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | Thiru.S.R.Moorthy Contractor, Sathyamangalam. | ரூ.4.60 இலட்சம் | மதிப்பீடு தொகையினை விட 0.04 % குறைவு | ரூ.3,85,772/- |
| 2 | M/s.Vino Constructions, Contractor, Bhavani Sagar. | | மதிப்பீடு தொகையினை விட 0.74 % அதிகம் | ரூ.3,88,768/- |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Thiru.S.R.Moorthy, Contractor, Sathyamangalam ஒப்பந்தப்புள்ளி ஏற்க நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)இப்பணியின் அவசர அவசியம் கருதியும்,திட்டப்பணி உரிய காலகெடுவிற்குள் முடிக்கப்பட வேண்டிய உள்ளதாலும்,ஒப்பந்ததாருக்கு பணி ஆணை வழங்கப்பட்டு பணி துவங்கப்பட்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(கட்டு எண்.1908/2022/இ1)

**தீர்மானம் எண் : 178 அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது நாள் 30.09.2022**

பொருள் : 12

நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.31117/2021/CFC -1 நாள்.05.09.2022 இன்படி 2021-2022 ஆம் ஆண்டு 15 வது நிதி குழு மான்யம் Un Tied Grant திட்டத்தின் கீழ் சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட மொண்டிகரடு புளியங்கோம்பை மற்றும் ஆண்டவர் நகர் ஆகிய பகுதியில் குடிநீர் வசதிகள் மேற்கொள்ள ரூ.5.47 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு 16.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு நகர் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | Thiru.S.R.Moorthy, Contractor, Sathyamangalam. | ரூ.4,56,621/- | மதிப்பீடு தொகையினை விட 0.39 % குறைவு |
| 2 | M/s.Vino Constructions, Contractor, Bhavani Sagar . | ரூ.4,63,237/- | மதிப்பீடு தொகையினை விட 1.06%குறைவு |

குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s.Vino Constructions, Contractor, Bhavani Sagar நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s.Vino Constructions, Contractor, Bhavani Sagar ஒப்பந்தப்புள்ளி ஏற்று கொள்ளலாம்.

(கட்டு எண்.1770/2021/இ1)

**தீர்மானம் எண் : 179 அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது நாள் 30.09.2022**

பொருள் : 13

இந்நகர் மன்ற தீர்மானம் எண்.129/29.7.2022 இன்படி கீழகண்ட பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இப்பணியின் அவசர அவசியம் கருதி 16.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

வேலையின் பெயர்:Flushing of Existing Borewell Water Supply and Borewell arrangements at Badhrakaliamman Kovil West Street in Sathyamangalam Municipality
Estimate Amount :Rs.1,50,000

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | Thiru.S.R.Moorthy Contractor, Sathyamangalam. | ரூ.1,25,562/- | மதிப்பீடு தொகையினை விட 0.08 % குறைவு |
| 2 | M/s.Vino Constructions Contractor, Bhavani Sagar. | ரூ.1,26,137/- | மதிப்பீடு தொகையினை விட 0.38% அதிகம் |

குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Thiru.S.R.Moorthy, Contractor, Sathyamangalam நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது
அலுவலக குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Thiru.S.R.Moorthy, Contractor, Sathyamangalam, ஒப்பந்தப்புள்ளி ஏற்று கொள்ளலாம்.

(கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 180 அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது நாள் 30.09.2022**

பொருள் : 14

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட அம்மா உணவகத்தில் குளிர் சாதன பெட்டி, மாவு அரைக்கும் இயந்திரம், மசாலா அரைக்கும் இயந்திரம், ஸ்டீம் பாய்லர் ஆகிய இயந்திரம் பழுது ஏற்பட்டு சமைக்கும் பணி முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்கூரையில் விரிசல் ஏற்பட்டு மழை நீர் கசிவு ஏற்பட்டுள்ளது, முகப்பு கதவுகள் முற்றிலும் பழுது பார்க்கப்பட வேண்டும், அம்மா உணவகம் கட்டப்பட்டு பல வருடங்கள் மேலாகி விட்டதால், வர்ணம் பூசப்பட வேண்டும். மேற்கண்ட குறைகள் நிவர்த்தி செய்து தரக்கோரி சக்தி மகளிர் சுய உதவிக்கு, அம்மா உணவகம் பராமரிப்பாளர்கள் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளார். இப்பொருள் மீது சிறப்பு கவனம் செலுத்தும் பொருட்டு மேற்கண்ட பராமரிப்பு பணிகள் மற்றும் பழுதுகள் சரி செய்ய உத்தேசமாக செலவினம் **ரூ.2.00 இலட்சம்** ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 181** அனுமதிக்கப்பட்டது நாள் 30.09.2022

பொருள் : 15

**சத்தியமங்கலம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகரில் உருவாகும் திடக்கழிவுகளை தரம் பிரித்து சேகரம் செய்து மக்கும் குப்பைகளை MCC மற்றும் WINDROWS முறையில் உரமாக்கப்பட்டு விவசாயிகளுக்கு குறைந்த விலையில் அளிக்கப்பட்டு வருகிறது. இதர உலர் கழிவுகளான பிளாஸ்டிக், செருப்பு, லெதர், ரெசின்கவர், பேக்ஸ் போன்றவை அரியலூர் சிமெண்ட் ஆலைக்கு உப எரிபொருளாக அனுப்பப்பட்டு வருகிறது. இதைத்தவிர நகரில் தினசரி சேகரமாகும் டயப்பர், நாப்கின்கள், வாழை சருகுகள், சிறிய குச்சிகள் மற்றும் மறுசுழற்சி செய்ய இயலாத inert பொருட்களை சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்த, Incinerator சாதனத்தை சத்தியமங்கலம் நகராட்சி அத்தானி ரோட்டில் அமைந்துள்ள நகராட்சி உரப் பூங்காவில், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அனுமதி பெற்று அமைத்துக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**

அலுவலககுறிப்பு;

1. **நகர்மன்றம் அனுமதிக்கலாம் .**
2. **பொதுசுகாதார நலன் கருதி நகர்மன்றம் அனுமதிக்கலாம்**

**(கட்டு எண்.1354/2019/இ1)**

**தீர்மானம் எண் : 182** அனுமதிக்கப்பட்டது நாள் 30.09.2022

பொருள் : 16

இந்நகர் மன்ற தீர்மானம் எண். 85/28.06.2022,113/28.06.2022,49/09.05.2022 இன்படி கீழ்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது இப்பணி அவசர அவசியம் கருதி 23.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு நகர் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

வேலையின் பெயர்: தினசரி மார்க்கெட் வளாகத்தில் விவசாய பொருட்கள் வைக்க தற்காலிமாக சேமிப்பு கிடங்கு பழுது மற்றும் பராமரித்தல்
மதிப்பீடு தொகை :ரூ.2.00 இலட்சம் (வருவாய் நிதி)

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | Thiru.Arumugam, Contractor, Sathyamangalam. | ரூ.1,65,768/- | மதிப்பீடு தொகையினை விட 0.41%குறைவு |
| 2 | M/s.Vino Constructions, Contractor, Bhavani Sagar. | ரூ.1,67,407/- | மதிப்பீடு தொகையினை விட 0.57% அதிகம் |

வேலையின் பெயர்: வார்டு எண்.27 திருமலை நகர் பகுதியில் சிறுபாலம் பழுது பார்த்தல்
மதிப்பீடு தொகை :ரூ.1.60 இலட்சம் (வருவாய் நிதி)

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | Thiru.Arumugam, Contractor, Sathyamangalam. | ரூ.1,33,317/- | மதிப்பீடு தொகையினை விட 0.16%குறைவு |
| 2 | M/s.Vino Constructions, Contractor, Bhavani Sagar. | ரூ.1,34,710/- | மதிப்பீடு தொகையினை விட 0.88% அதிகம் |

வேலையின் பெயர்: வார்டு எண்.27 ரங்கசமுத்திரம் சந்து எண்.11 சின்டெக்ஸ் டேங்க் மற்றும் பிளாட்பாரம் பழுது சரி செய்தல்
மதிப்பீடு தொகை :ரூ.0.90 இலட்சம் (குடிநீர் நிதி)

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | Thiru.Arumugam, Contractor, Sathyamangalam | ரூ.75,208/- | மதிப்பீடு தொகையினை விட 0.10%குறைவு |
| 2 | M/s.Vino Constructions, Contractor, Bhavani Sagar. | ரூ.75,433 /- | மதிப்பீடு தொகையினை விட 0.20% அதிகம் |

வ.எண்.1 முதல் 3 வரை உள்ள பணிகளுக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Thiru.Arumugam Contractor Sathyamangalam ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Thiru.Arumugam Contractor Sathyamangalam ஒப்பந்தப்புள்ளி ஏற்று கொள்ளலாம்.

(ந. க. எண். 548/2022/இ1)

**தீர்மானம் எண் : 183 வரிசை எண் 1 முதல் 3 வரை குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு. ஆறுமுகம் ஒப்பந்ததாரர் சத்தி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டது.**
**நாள் 30.09.2022**

பொருள் : 17

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப பிரிவில் பயன்படுத்தப்பட்டு வந்த கீழ்க்கண்ட வாகனங்கள்

| வ. எண். | வாகன எண் | வாகன விபரம் | வாங்கிய ஆண்டு |
|---|---|---|---|
| 1 | TN 36 Z 1229 | டம்பர் பிளேசர் | 1999 |
| 2 | TN 36 Z 3643 | கழிவுநீர் வாகனம் | 1999 |
| 3 | TN 36 Y 6881 | டிராக்டர் | 2005 |
| 4 | TN 36 X 0879 | டம்பர் பிளேசர் | 2006 |

வாங்கி அதிக ஆண்டுகள் ஆகி விட்டன. மேலும் அதில் அடிக்கடி பழுது ஏற்படுவதால், பழுது பார்க்கும் செலவினம் அதிகமாகிறது. எனவே மேற்கண்ட வாகனங்களை தகுதி நீக்கம் செய்யவும், அதற்கான கருத்துரு அரசு தானியங்கி பணிமனைக்கு அனுப்பவும், அதற்காகும் செலவின தொகை ரூ.50,000/-த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1.நகர்மன்றம் அனுமதிக்கலாம்.

2.பொது சுகாதார நலன் கருதி நகர்மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1901/2022/எச்.1)

**தீர்மானம் எண் : 184 அனுமதிக்கப்பட்டது நாள் 30.09.2022**

பொருள் : 18

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் பணியாற்றி வரும் தூய்மை பணியாளர்கள், தூய்மை பணி மேற்பார்வையாளர்கள், ஓட்டுநர்கள், பொறியியல் பிரிவில் பணிபுரிந்து வரும் சீருடை பெற தகுதி உள்ள பணியாளர்களுக்கும் 2022-23 ஆம் ஆண்டு வருடாந்திர சீருடை துணிகள், காலணிகள் வாங்கவும் மற்றும் தையல் கூலி வழங்கவும் ஆகும் உத்தேச செலவினம் ரூபாய் 4,00,000/-க்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் மேற்கண்ட சீருடையை தமிழ்நாடு அரசு நிறுவனமான கோ ஆப் டெக்ஸ் நிறுவனத்திலும் காலணிகளை தமிழ்நாடு அரசு நிறுவனமான காதி கிராப்ட் நிறுவனத்திலும் கொள்முதல் செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக்குறிப்பு;

1.நகர்மன்றம் அனுமதிக்கலாம்.

2.பொதுசுகாதார நலன் கருதி நகர்மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1972/2022/எச்.1)

**தீர்மானம் எண் : 185 அனுமதிக்கப்பட்டது நாள் 30.09.2022**

பொருள் : 19

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகரில் திடக்கழிவுகளை முதன்மை சேகரம் செய்ய பயன்படுத்தப்படும் 24 BOV வாகனங்களில் பழுதுகளை நீக்கம் மற்றும் பராமரிப்பு செய்து தரும் பணிக்கு தகுதி வாய்ந்த நிறுவனங்களிடம் 23.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு நிறுவனங்கள் அளித்துள்ளன.

| வ.எண் | பொருள் | DS இன்ஜினியரிங், ஈரோடு ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | Jayam Equipments and Engineering, Dharapuram ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவுகள் முதன்மை சேகரம் செய்தல் பணிக்கு பயன்படுத்தப்படும் 24 BOV வாகனங்களில் பழுதுகளை நீக்கம் செய்து தரும் பணி (ஒருவருடத்திற்கு சராசரியாக வண்டி ஒன்றுக்கு ரூ.30,000/-) | 7,38,000/- (G.S.T நீங்கலாக) | 7,40,000/- (G.S.T நீங்கலாக) |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி கலம் எண். 3 இல் கண்டுள்ள DS இன்ஜினியரிங், ஈரோடு என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மிகவும் குறைவாக உள்ளது. அதனை ஏற்று அங்கீகரிக்க நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : பொது சுகாதாரப்பணியின் நலன் கருதி நகர் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந. க. எண்.568/2022/எச்.1)

**தீர்மானம் எண் : 186 அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது நாள் 30.09.2022**

நாள் : 26.09.2022 நகர்மன்ற தலைவர்

இடம் : சத்தியமங்கலம். சத்தியமங்கலம் நகராட்சி.

**2022-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30.09.2022-ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்.**

பொருள் : 1

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண்.125 நாள்.09.09.2022 இன்படி இந்நகராட்சிக்கு அம்ரூட்-2.0 (Atal Mission for Rejuvenation and urban Transformation - AMRUT 2.0) இன்கீழ் சத்தியமங்கலம் நகராட்சிக்கு குடிநீர் விநியோக அபிவிருத்தி மேம்பாடு பணிக்கு ரூ.32.82 கோடி நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. கீழ்கண்ட அலகில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| Sl.No | Project Name | Appraised Project cost (in crore ) | GoI Share (in crore ) | GoTN Share (in crore ) | ULB Share /External /aid/MIDF (in crore ) |
|---|---|---|---|---|---|
| 1 | Improvements of Water Supply Distribution system in Sathyamangalam Municipality | Rs.32.82 | Rs.16.41 | Rs.9.85 | Rs.6.56 |

மேற்கண்ட திட்டத்தில் மொத்த நிதி ஒதுக்கீட்டில் ரூ.16.41 கோடி மத்திய அரசு பங்கு ரூ.9.85 கோடி மாநில அரசு பங்கு ரூ.6.56 கோடி நகராட்சி பங்கு தொகையாக பிரித்து அரசானை வழங்கப்பட்டுள்ளது. அரசாணை நகர் மன்றத்தின் பார்வைக்கு, பதிவிற்கும் வைக்கப்படுகிறது. மேலும், நகராட்சி பங்கு தொகை ரூ.6.56 கோடி நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-
1) மன்றம் அனுமதிக்கப்படுகிறது
2) நகராட்சி பங்கு தொகை ரூ.6.56 கோடி நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(கட்டு எண்.690/2021/இ1)

**தீர்மானம் எண் : 187** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது **நாள் 30.09.2022**

நாள் : 29.09.2022
இடம் : சத்தியமங்கலம்

நகர்மன்ற தலைவர்,
சத்தியமங்கலம் நகராட்சி.